<u>11.02.2026</u>

<u>O.S.No.86/2014</u>

<u>பி.வா.சா.1.திரு.அருணாச்சல செட்டியார், த.பெ.திரு.கண்ணப்ப செட்டியார். சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்</u>

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) எனது தாயார் பெயர் சிவகாமி ஆச்சி என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே நம்பர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி அரசன் என்பவர் யார் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் என்னுடைய சொத்தை அவர்களுடைய சொத்து என்று சொல்லுகிறார்கள். பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவா சொத்தின் சர்வே எண்.243/2C1A என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்து ஆகும். நான் மேஜரானவுடன் ஆவணங்களை பார்வையிட்டுள்ளேனா என்றால் ஓரளவு பார்வையிட்டுள்ளேன். பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவா சொத்து நஞ்சையா புன்சையா என்ற வகைப்பாடு குறிப்பாக குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது.

2) பி.வா.சா.ஆ.3 ஆவணமானது எனது அப்பா கண்ணப்பன் செட்டியார் கிரையம் வாங்கிய ஆவணம் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கிரைய தொகை ரூ.2000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனது அப்பாவின் தொழில் பேங்கர் விவசாய தொழில் குறிப்பிடப்படுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி ஏற்கனவே ரொக்கையா பீவி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி உள்ள கடன் ரூ.1000/- மற்றும் ஏற்கனவே குடும்ப செலவுக்காக வாங்கிய கடன் ரூ.1000/- ஆகியவற்றை சேர்த்து ரூ.2000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.6, பி.வா.சா.ஆ.7 கதவு எண்ணும் புல எண்ணும் குறிப்பிடப்படவில்லை என்றால் வீட்டு வரியில் கதவு எண் மட்டுமே வரும். பி.வா.சா.ஆ.8, பி.வா.சா.ஆ.9 வாடகை ஒப்பந்த ஆவணங்கள் பதிவு செய்யப்படாத ஆவணங்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் கதவு எண்.5/55 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கதவு எண்கள் அப்போதைக்கு அப்போது நகராட்சியில் கதவு எண் மாறும். கதவு எண் மாற்றம் சம்மந்தமாக நகராட்சியில் இருந்து Correlation சான்று வாங்கி தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

3) பி.வா.சா.ஆ.10, பி.வா.சா.ஆ.11,பி.வா.சா.ஆ.12 மற்றும் பி.வா.சா.ஆ.13 ஆகிய ஆவணங்களில் கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்பதால் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. அந்த வரி ரசீதுகள் எல்லாம் நகராட்சிக்கு என்னால் பணம் செலுத்தப்பட்டு வாங்கிய ஆவணமாகும். தாவா சொத்தை எனது அப்பா கிரையம் வாங்கிய பின்பு நாங்கள் குடியிருந்ததாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் இறப்பு சான்றிதழோ வாரிசு சான்றிதழோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை குறித்து எனது பெயரிலே வரி ரசீது உள்ளதால் அதனால்தாக்கல் செய்யப்படவில்லை. தாவா சொத்து மேலூர் பிரதான சாலையில் கக்கன் சிலையின் அருகில் உள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.9 ஆவணத்திற்கு பின்பு வாடகை ஒப்பந்தம் புதுப்பித்துக் கொண்டதற்காக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதன்பின்பும் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக ஞாபகமுள்ளது தேவையென்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

4) வாடகை ரசீது எதுவும் நாங்கள் வழங்கியதாக இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.14 வில்லங்க சான்றிதழில் 01.01.1950 முதல் 31.12.1966 வரையிலான காலங்களில் ஒரே

ஒரு பதிவு மட்டுமே காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த காலக் கட்டத்தில்தான் பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றால் ஆமாம். ரொக்கையா பீவி பெயரில் நான் வரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை.

5) வழக்கிடை சொத்து பசுபதி ஏகாளி மகன் மருதான் ஏகாளிக்கு பூர்வீக பாத்தியப்பட்டு அவரும் வா.சா.ஆ.1 ஆவணப்படி 04.12.1951ம் தேதியில் நாராயண நாயருக்கு வாடகைக்கு விட்டு அவரது பெயரில் வரி செலுத்தி அவருக்கு பின் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை. தாவா சொத்து கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்றும் எதிரிடை அனுவபம் மூலம் பாத்தியப்பட்டது என்றும் இரண்டு வெவ்வேறு வாதம் செய்கிறோம் என்றால் கிரையம் மூலம் பாத்தியப்பட்டதாக தாக்கல் செய்துள்ளேன். 2ம் பிரதிவாதி வாதியின் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை அவருக்கு வாடகை செலுத்தி வந்தார் என்றும் அவர் இறந்த பின்பு நானும் 2ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறோம் என்றால் இல்லை. நானும் 2ம் பிரதிவாதியும் தாவா சொத்தின் அனுபவத்தை வாதி வசம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u> இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.